பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

# விடுதலை

இதழ்: 28 ஞாயிற்றுக்கிழமை 5-11-1989

## நூல்கள் கொள்வனவு மா. அரசு நடவடிக்கை

(திருமலை)

வடக்கு கிழக்கிலிருந்து வெளியாகும் நூல்களில் குறிப்பிட்ட தொகையினைக் கொள்வனவு செய்வதற்கு மாகாண கலாச்சாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துச் செயற்பட்டு வருகிறது. இதற்காக 3 இலட்சம் ரூபாவை முதலமைச்சர் ஒதுக்கியுள்ளதாக திணைக்களச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது

ஏற்கனவே ஈழத்துப் படைப்பாளர்களின் 5 நூல்களைக் கொள்வனவு செய்திருப்பதாகவும், திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் எழுதிய திராவிட கலாச்சாரமும் தொல்பியல் ஆய்வுகளும் என்ற நூலையும் ந. பரமேஸ்வரி எழுதிய உள்ளக் கோவிலிலே என்ற நூலையும் அடுத்துக் கொள்வனவுசெய்ய இருப்பதாகவும் அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

இதுவரை 75,000 ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும், எஞ்சிய தொகைக்கான நூல்களைக் கொள்வனவு செய்வதற்குத் துரித நடவடிக்கைகள் மேற்

(4ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் மாகாணபொலீஸ்நிலையம் நீதிமன்றம் மீண்டும் இயங்கும்

(திருமலை விசேட நிருபர்)

**வடக்கு கிழக்கு மாகாண அரசின் கீழ் செயல்படவுள்ள மாகாணப் பொலிஸ் பிரிவின் வடபகுதிக்கான முதலாவது பொலிஸ்நிலையமும், நீதிமன்றமும் நகரில் இன்னும் ஒரு வார காலத்தில் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.**

இதற்கான நடவடிக்கைகளை மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாளின் பணிப்புரையின் பேரில் மாகாண உதவிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றும் திரு. ரி. ஈ. ஆனந்தராசா மேற்கொண்டு வருகின்றார்.

இப் பொலிஸ் நிலையத்தில் மக்கள் தொண்டர் படையினரும், தமிழ் பொலீசாரும், தமிழ் றிசேவ் பொலீசாரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பொதுமக்களின் முறைப்பாடுகள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நீதிமன்றத்தில் வழக்குகளும் தாக்கல்செய்யப்படும்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரூடியோவில் களவு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள ஒரு ஸ்ரூடியோ மர்மமான முறையில் உடைக்கப்பட்டு, விலையுயர்ந்த இரண்டு கமராக்கள் திருடப்பட்டுள்ளன.

இந்த ஸ்ரூடியோவிலுள்ள கமராக்கள், காசுகள், பெறுமதிமிக்க உபகரணங்கள் என்பனவும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது

(4ம் பக்கம் பார்க்க)



நேற்று முற்பகல், தமிழ் தேசிய இராணுவத்தினர் சத்திரச் சந்திக்கப்பாலுள்ள ஆஸ்பத்திரி வீதியை செப்பனிடும் காட்சி. (யாழ் நிருபர்)

## நாளை மறுதினம் கிளிநொச்சியில் 588 குடும்பங்களுக்கு நிவாரணம்

(கிளிநொச்சி)

எதிர்வரும் 7ந் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலைய வளவிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் 588 குடும்பங்களுக்கு நிவாரணப்பணம் வழங்கப்படவிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கணேசபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி பட்டினம், பரந்தன், சிவநகர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 588 குடும்பங்களுக்கு முதலில் மீளக் குடியமர்வு, தொழில் பாதிப்பு, வீடழிவு நிவாரணங்கள் வழங்கப்படும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

8-ந் திகதி புதன்கிழமையும் கணேசபுரம் சிவநகர் பகுதிகளிலுள்ள சுமார் 100 குடும்பங்களுக்கு இந்நிவாரணங்கள் தொடர்ந்து வழங்கப்படவிருப்பதாகவும் கிளிநொச்சி வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஓராண்டு நினைவையொட்டி மரம் நடுகை இயக்கம்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாண அரசின் ஓராண்டு நிறைவையொட்டி வடக்கு கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் மரம் நடுகை இயக்கம் மார்கழி 5ந் திகதி முதல் 10ந் திகதிவரை நடக்க நடவடிகை மேற்கொண்டிருப்பதாக காணிவிவசாய அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. மாவட்ட மட்டத்தில் இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு எட்டு மாவட்டங்களின் ஆணையாளர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

மரம்நாட்டு இயக்கத்தை திருமலையில் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் அவர்களும், அம்பாறை மாவட்டத்தில் நிதி வர்த்தக கடற்றொழில் அமைச்சர் திரு. பெ. கிருபாகரன் அவர்களும்,

(4ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் எம். பி. கருணாரத்தின நேற்றுக் காலமானார்

(இறக்குவானை)

பலாங்கொடைத் தொகுதியின் முன்னாள் உறுப்பினரும், அமைச்சருமான பி. ரி. ஜி. கருணாரத்தின நேற்றைய தினம் காலமானார்

1956ம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் நீர்பாச்சன தபால் தொலைதொடர்பு கல்வி என்னும் அமைச்சுகளின் பிரதி அமைச்சராகவும், புடவைக் கைத்தொழில் அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரது மரணச்சடங்குகள் இறக்குவானையில் நடைபெறும்.

● சகல வர்த்தக நிலையங்களிலும்

## விலைப்பட்டியல் தொங்க விடுமாறு அரசியல் இணைப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

'எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்னர் சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல்களின் விபரமடங்கிய அறிவிப்புகள் தொங்கவிடப்படுவதுடன், நிர்மானிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகள் சரியான முறையில் அமுல் நடத்தப்பட வேண்டும்.'

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. கே. ரவீந்திரன். கட்டுப்பாட்டு விலை தொடர்பாக வர்த்தகர்களுக்கு நேற்று விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். அவ் வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவிப்பதாவது.

''கடந்தகால வன்முறை நிகழ்வுகளின் பின்னர் நடைமுறையில் இருந்துவந்த விலைக் கட்டுப்பாட்டு அறிவிப்புகள் கைவிடப்பட்டு,சூழ் நிலைகளிற்கேற்ப சாமான்களை தருவிப்பதில் இருக்கக்கூடிய நெருக்கடிகள் கவனத்தில் கொண்டே விலைகள் நிர்ணயம் செய்யப்

(4ம் பக்கம் பார்க்க)

## சுகாதார உதவியாளர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுகாதார உதவியாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 2ம், 3ம் திகதிகளில் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

சுமார் ஐம்பதிற்கும மேற்பட்டோர் இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாண அரசியல் இணைப்பாளர் காரியாலயத்திலேயே இந்நேர்முகப் பரீட்சை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## நகரசுத்தித் தொழிலாளருக்கு புதிய வீடமைப்புத் திட்டம்

(திருகோணமலை)

''நவீன அபிவிருத்தித்துறை வளர்ச்சிகளுக்கு சமாந்தர நிர்வாக முகாமைத்துறையிலும் சிந்தனைகளை ஈடுபடுத்தி செல்வதின் மூலமே உரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும். திட்டமிடலைப் பொறுத்த வரையில், அது கம்ப்யூட்டர் உதவியுடன் உறுதியாகவும், வெற்றிகரமாகவும் மேற்கொள்ள முடியும்''

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண இளைஞர் விவகார திட்டமிடல் அமைச்சர் திரு. கே. கே. ஜோர்ஜ் செனிவிரத்தின தமது அமைச்சில் கம்ப்யூட்டர் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார். மேற்படி அமைச்சின் செயலாளர் திரு. தர்மராசா வைபவத்துக்கு தலைமைதாங்கினர்.

நகரத்தைத் தினமும் சுத்தமாக வைத்திருக்க உதவுபவர்களான நகரசுத்தித் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காகவும், நலன்புரிதல்களுக்காகவும் மாகாண அரசு பலமுற்போக்குத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது என்றார் அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவாவில் தேயிலைத் தொழிற்சாலைகள் தீக்கிரை

(பசறை)

**ஊவா மாகாணத்திலுள்ள டயரபா, ஹாலி-எல, இந்துக்கொல்லை போன்ற இன்னும் பல பெரிய தோட்டங்களின் தொழிற்சாலைகள் இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது.**

இவ்வாறு தீக்கிரையாக்கப் பட்டுள்ள தொழிற்சாலைகளில் சில முழுமையாகவும், அரை குறையாகவும் எரிந்த நிலையி லுள்ளன.

இத் தொழிற்சாலைகள் எரிக்கப்பட்டமையால், தோட்டங்களில் கொழுந்து பறிக்கும் வேலைகள் ஸ்தம்பித மடைந்துள்ளதோடு, அத் தோட்டங்களுக்கு பல லட்சக் கணக்கான ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளன.

தீவிபத்துக்களை உடன் தடுப்பதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப் பட்டிருந்தபோதிலும், எரியூட்டப்பட்ட சமயம் அவை செயலிழந்து இருந்தமை தோட்ட நிர்வாகங்களுக்கு பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பதுளை, பசறை, நமுனுகுல, பண்டாரவளை, அப்புத்தளை போன்ற பகுதிகளிலுள்ள தோட்டங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது

## ஆசிரியருக்கு கடிதம்

# அம்பாறைக்கு ஒரு நீதி வடக்குக்கு ஒரு நீதியா?

மக்கள் வங்கி மீது வடக்கு கிழக்கு மாகாண மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர். மக்கள் வங்கி வாடிக்கையாளருடன் எற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியது மட்டுமன்றி, பிரதேசத்திற்கொரு நீதி, சலுகை முறைகளை மேற்கொள்வது மிக வேதனைக்குரியது.

நகை அடகு வைக்கும்போது கொடுக்கும் பணம், அதற்குரிய வட்டி இரண்டையும் சேர்த்துக் கட்டும்போது நகை மீளளிக்கப்படும் என்பதே நடைமுறையில் வங்கி வாடிக்கையாளர்களின் வழக்கம்.

மக்கள் தமது நகையை மீட்க பணம் கட்டி பலமாதம் காத்திருக்கின்றனர் தொடர் வன் செயல்களால் பெரும் பாதிப்படைந்த பலர் வட்டிக்கு பணம் எடுத்து அடகு நகை மீட்க வங்கியில் கட்டி பலமாதங்கள் சென்றும், தம் அடகு நகை தம் கைக்கு வரவில்லை என அங்கலாய்க்கின்றனர்.

அடகு நகையை மீட்டு, அவற்றை பெற்று வட்டிக்குக் கொடுத்த கடனை தீர்த்துவிட்டு மிஞ்சும் பணத்தை, இன்றைய தமது தேவைக்கு எடுக்கலாம் என்று நினைத்து வங்கிக்கு பணம் கட்டியபின் பலமாதங்களாகியும் நகை கிடைக்கவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல வட்டி, ஏறுகின்றதே என வாடிக்கையாளர் வருந்துகின்றனர்.

வங்கி கொழும்பிற்கு நகைகள் எடுத்துச் சென்ற காலத்திற்கு வட்டிகட்டுமாறு கேட்பதில் நியாயமில்லை: கொழும்பிற்கு நகைகளை எடுத்துச் செல்லமுன், வாடிக்கையாளருக்கு, உடன்வந்து உங்கள் கடனைக்கட்டி, நகைகளை மீட்டுக் கொள்ளுங்கள் என முன் அறிவித்தல் கொடுக்காது கொழும்பிற்கு எடுத்துச் சென்றுவிட்டு, இப்போது முழுக்காலத்திற்கும் அல்லது நகை கொழும்பிற்கு எடுத்துச் சென்ற காலத்தின் ஒரு பகுதிக்கோ வட்டி அறவிட நிற்பது நியாயத்திற்கு பொருந்தாத சொல்.

1984ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப் பட்ட நகைகள் வாடிக்கையாளர் சம்மதம் அறியாமல் கொழும்பு கொண்டு செல்லப்பட்டன.

அம்பாறை மாவட்ட மக்கள் 1984 மார்ச் 31ந் திகதிக்குப் பின் வட்டி கட்ட வேண்டியதில்லை என மக்கள் வங்கி சலுகை அளித்துள்ளது 31ந்திகதிக்கு பிந்திய காலத்திற்கான வட்டியை அழித் தெழுதும் சலுகை வழங்கியுள்ளது,

அம்பாறை மாவட்ட மக்கள் தான் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களா?

தொடர் இனக்கலவரத்தால் வன்செயல்களால் உடன் பிறப்புகள், உடமைகள்' செய்தொழில்கள், பயிர்ச்செய்கைகள், வீடு வாசல்களை எல்லாம் இழந்து பெரும் வறுமை, மீளத் தொழில் செய்யமூலதனம். உதவி, ஆளணி இன்றி பரிதவிக்கும் வடக்கு கிழக்கு மக்களிடம் அறவிடக்கூடாத காலத்திற்கு அறவிடமுயல்வது அழகல்ல.

கூட்டுறவு வங்கியின் இடத்திற்கு மக்கள் வங்கி ஆரம்பித்த ஆரம்ப காலத்தில் மக்களுக்கு சேவை செய்யவும் மக்களை பாகுபாடின்றி மேன்மைப்படுத்தவுமே மக்கள் வங்கி உதயமளித்து கோட்பாட்டிலும், செயற்பாட்டிலும் பாகுபாடுகாட்டுவது வரவேற்கத்தக்கதல்ல.

பாதிக்கப்பட்டோர்.
வட்டுக்கோட்டை,

## தண்ணீருக்குள் ஒரு விநோத நகரம்

விநோத உலக நகரம் தண்ணீருக்குள் ஜேர்மனியர்களால் நிர்மாணிக்கப்பட இருக்கிறது. இந்த நகரம் மூன்று அடுக்கு மாடிகளை உடைய பிரமாண்டமான கட்டிடத்தில் உருவாக்கப்படும்.

கேளிக்கை வசதிகள், கல்வி, கலாச்சார மையங்கள் போன்றவை இங்கு உண்டு. ஒரு நகரத்துக்கு தேவையான அம்சங்கள் அனைத்தும் உண்டு. இந்த நகரத்தில் ஒரே நேரத்தில் 5600 பேர் தங்கலாம். இந்த நகரம் நிர்மாணிக்கப்படுவது தரையில் அல்ல, தண்ணீரில்! உலகிலேயே மிகப் பெரிய உல்லாசக் கப்பல்கள் நோர்வே, குயீன் எலிசபெத், காவேரி ஆகியவை. இந்த மூன்று கப்பல்களையும் ஒன்று சேர நிறுத்தினுல் எவ்வளவு பரப்பளவு வருமோ அவ்வளவு பரப்பளவில் ஜேர்மனியர்களின் விநோத நகரம் இருக்குமாம். இந்த விநோத நகரத்தின் மொத்த எடை 2,50,000 டன். நகரத்தை அமைக்க 1000 மில்லியன் டொலர் செலவிடப்படும். தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், சினிமா தியேட்டர், கலையரங்கம், படிப்பகம், தொலைகாட்சி மற்றும் வானெலி நிலையங்கள் கல்லூரி மண்டபங்கள். விளையாட்டரங்கம் என்று சகல வசதிகளையும் கொண்ட இந் நகரம் சுமார் 1/4 மைல் நீளமுள்ளதாக இருக்கும்.

## மலையகத்தில் பொலிஸ் ராணுவ நடவடிக்கை தீவிரம்

(அட்டன்)

மலையகத்தில் தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதனுல் அட்டனைச் சுற்றியுள்ள டிக்கோயா, நோர்வூட், கொட்டக்கலை, குயில்வத்தைபோன்ற பகுதிகளிலுள்ள பல தோட்ட இளைஞர்களும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இத்தகைய தேடுதல் வேட்டைகளில் பொலிசாருடன், இராணுவத்தினரும் இணைந்து செயல்பட்டுவருவதோடு, மலையகத்தைச்சேர்ந்த தோட்ட சேவையாளர்களும், ஆசிரியர்களும்கூட இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

மலையகத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் தீவைப்புச் சம்பவங்களுக்கும், மலையக இளைஞர்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தை தொடர்ந்தே பொலீஸ், இராணுவத்தினரின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

## ஹோட்டல் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு போராடவேண்டும்

(கிளிநொச்சி)

''தொழிலாளி வர்க்கம் ஐக்கியப்படுவதின் மூலமே தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் அடிப்படையிலேயே கிளி-நொச்சி மாவட்டத்தில் நாம் பல்வேறு தொழிற்சங்கங்களை அமைத்து வருகின்ருேம். ஹோட்டல் ஊழியர்கள் எட்டு மணி நேரத்திற்கும் மேலாக இரவு பகல் வேலை வாங்கப்பட்ட போதிலும். மிகக் குறைந்த சம்பளமே வழங்கப் படுகின்றது. இந்நிலையில் சகல ஹோட்டல் தொழிலாளர்களும் ஐக்கியப்படுவதின் மூலம் சம்பள உயர்வைப் பெற முடியும்.''

இவ்வாறு திருமுருகண்டியிலுள்ள ஹோட்டல் ஊழியர் சங்கக் கூட்டத்தில் பேசிய திரு. வி. என். நெல்சன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 'தொழிலாளி வர்க்கம் பிளவுபட்டு சிதறுண்டு இருப்பதினுல் தான் இன்று எமது உரிமைகளைப் பெற முடியாமலுள்ளது. ஹோட்டல் தொழில் சார்ந்த சகல தொழிலாளிகளையும் ஒரே சங்கத்தில் இணைப்பதற்கான முயற்சிகளில் அனைவரும் முழுமூச்சுடன் ஈடுபட வேண்டும்' என்ருர்.

இச் கூட்டத்தில் தலைவராக திரு. பி. சுந்தரம், செயலாளராக திரு. வி. என். நெல்சன், பொருளாளர் திரு. ரி. ரவீந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் ஏழு பேர்தெரிவுசெய்யப்பட்டனர்.

# வன்செயல்களால் அரசுக்கு 900 கோடி நட்டம்

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களால் அரசுக்கு 900 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஜனதிபதி ஆர். பிரேமதாசா, மாத்தறையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

வன்செயல்களால் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட நட்டத்தினை புள்ளி விபரங்ளோடு கூட்டத்தில் தெரிவித்தார்.

ஜனதா விமுக்தி பெரமுனவினருக்கும், அரச படைகளுக்குமிடையேயான மோதல்களின் போது நாளாந்தம் அரச கட்டடங்களும். அரச வாகனங்களும் தீக்கிரையாக்கப்படுவதுடன், மலையகத் தோட்டங்களிலுள்ள பெறுமதி வாய்ந்த பாரிய தேயிலைத் தொழிற்சாலைகளும் தீமூட்டி எரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தேயிலைத் தொழிற்சாலைகள் எரியூட்டுவதால், அத்தோட்டங்களிலுள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளதோடு தோட்டத்து இளைஞர்களை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து தடுப்புக் காவலிலும் வைப்பதாக அறிய முடிகின்றது.

## அதிபர் பொன். சபாபதி கல்வியதிகாரியாக பதவி உயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கொத்தணிப் பாடசாலைகளில் ஒன்ருன உருத்திபுரம் கொத்தணிப் பாடசாலை அதிபரான திரு. பொன் சபாபதி அவர்கள், கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்ருர்.

இவர் பதவி உயர்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அதிபர்களும், உருத்திரபுரம் கொத்தணி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்ருேர்களும் இணைந்து பாராட்டுவிழாவினையும்பிரிவுபகார விழாவினையும் நடாத்தி அவரது சேவையைக் கௌரவித்தனர்.

கிளிநொச்சிமாவட்டத்தைப் பொறுத்தவரை சிறந்த நிர்வாகத் திறமைமிக்க அதிபராகவும் விளங்கியதோடு பின் தங்கிய மாவட்டமான கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சிக்கு முழுமையாகச் செயலாற்றியவர்.

இவர் வட்டக்கச்சி மகா வித்தியாலய அதிபராகக் கடமையபற்றிய காலத்தில், இம் மகாவித்தியாலயத்தின் சாரணர் குழுவினர் அகில இலங்கை ரீதியாக முதலாவது இடத்தைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை டிசம்பரில் நடைபெறும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை டிசம்பர் 4ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறுமென தெரிய வருகின்றது.

இப்பரீட்சைக்குரிய நேர அட்டவணைகளும் அனுமதிப் பத்திரங்களும் இரண்டொரு தினங்களில் பரீட்சாத்திகளுக்குக் கிடைக்கலாமென கல்வித்திணைக்கள வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

## கிளிநொச்சிக்கு காணி, விவசாய புனர்வாழ்வு அமைச்சர் விஜயம்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மாகாண அரசின் காணி, விவசாய, புனர்வாழ்வு அமைச்சர் திரு. பி. இராசரத்தினம் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுக் காசோலைகள் வழங்கும் வைபவத்திலும் அமைச்சர் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாக் கடலின் அட்லஸ் தயாரிப்பு

அட்லஸ் (திணைப்படம்) புத்தகத்தைப் புரட்டினால் பல்வேறு கண்டங்களின் படங்கள் இருக்கும். நாடுகளின் எல்லைகளைக் குறிக்கின்ற படங்கள் அல்லாமல் மலைகள், நதிகள் பீடபூமி, சமவெளி போன்றவற்றைக் காட்டுகின்ற படங்களும் காணப்படும். ஆனால் இந்த எல்லாப் படங்களிலும் கண்டங்களை அல்லது நாடுகளைச் சுற்றியுள்ள கடல்கள் அனைத்தும் வெறும் நீல நிறத்தில் காணப்படும்.

எனினும் உலகின் கடல்களுக்கென்றே தனியாக அட்லஸ் தயாரிக்கமுடியும். இப்போது இந்துமாக் கடலின் 150 பக்க அட்லஸ் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்துமாக் கடலின் நீர் முழுவதும் வற்றிப்போய் விட்டதாக நீங்கள் கற்பனை செய்து கொண்டால் நீண்ட மலைத்தொடர்கள், சிகரங்கள் (இவற்றின் உச்சிகளே தீவுகள்) எரிமலைகள், பள்ளத்தாக்குகள் நீண்ட வெட்டுப் பள்ளங்கள் பீடபூமிகள் ஆகியவற்றைக் காணமுடியும். உலகின் எல்லாக் கடல்களிலும் இவை அமைந்துள்ளன.

இந்துமாக் கடலை எடுத்துக் கொண்டால் இக்கடலின் நடுவே தெற்கு வடக்காக நீண்டமலைத்தொடர் உள்ளது. இதன் தென்கோடியானது கிளைகளாகப் பிரிகின்றது. இவை பிற கடல்களில் அமைந்துள்ள நடுக்கடல் மலைகளுடன் இணைந்தவையாக உள்ளது.

உலகின் இன்றையக் கண்டங்கள் அனைத்தும் ஒரு காலத்தில் ஒன்றோடு ஒன்று இணைந்து மாபெரும் கண்டமாக விளங்கியதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இக்கண்டம் கோண்டுவானலாந்து என்றுகுறிப்பிடப் படுகிறது ஏதோ ஒருயுகத்தில் இவ்விதம் கோண்டுவானலாந்து இருந்ததை இந்துமாக் கடல் ஆய்வுகள் மேலும்மெய்ப்பித்துள்ளன.

இப்போது தயாரிக்கப்பட்டுள்ள இந்துமாகடல் அட்லஸில் இக்கடலின் அடித்தரையிலிருந்து எழும் மலைகள், பள்ளத்தாக்குகள் முதலியவை படங்களாக இடம்பெற்றுள்ளன; தவிர, கடலடித் தரையின் காந்த மண்டலம், புவிஈர்ப்பு மண்டலம், பூமியின் உட்புறத்திலிருந்து இக் கடலடித் தரைவழியே வெளிப்படும் வெப்ப அளவு, கடலடித் தரையில் அமைந்த பூகம்பப் பிராந்தியம் எரிமலைபிராந்தியம் முதலியனவும் இதில் இடம்பெற்றுள்ளன.

யுனெஸ்கோவின் கீழான பன்னாட்டு கடல் ஆய்வுக் கமிஷனின் ஏற்பாட்டின்கீழ் 13 நாடுகளைச் சேர்ந்த கடல் ஆய்வுக் கப்பல்கள் நடத்திய ஆய்வுகளின் பலனாகவே இந்துமா கடல் அட்லஸ் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆய்வுப் பணியில் ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் உள்பட பலநாடுகளின் கப்பல்கள் பங்குகொண்டன. இந்த ஆய்வுகளின்போது இந்துமாக் கடலின் அடி நிலம் பற்றி பல புதிய தகவல்கள் கிடைத்தன.

ஆய்வுப் பணியின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களை வைத்து இந்துமாக்கடலின் அட்லஸைத் தயாரிக்கும் பணியில் ஆஸ்திரேலியா, பிரிட்டன், ரஷியா, இந்தியா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, எதியோப்பியா, தென்னாபிரிக்கா, ஜப்பான், இத்தாலி ஆகியவற்றைச் சேர்ந்த 100க்கும் அதிகமான விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.

உலகின் பெருங்கடல் ஒன்றின் அட்லஸ் தயாரிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். இந்துமாக்கடல் அட்லஸ் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அட்லாண்டிக், பசுபிக் கடல்களின் அட்லஸ்களும் வெளியிடப்படும். அட்லாண்டிக் கடல் அட்லஸ் இந்த ஆண்டுக் கடைசியில் வெளியாகும். பசுபிக் கடல் அட்லஸ் இன்னும் 2 ஆண்டுகளில் வெளிவரும்.

— என். ஆர்.

நன்றி: தினமணி சுடர்

## பஞ்சாபில் கொலைகள்

(சண்டிகார்)

பஞ்சாபில் நடந்த கலவரங்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். 2 பொலிஸ்காரர்கள் உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

சீக்கிய தீவிரவாதிகளுக்கிடையே நடந்த குழுச் சண்டையில் காலிஸ்தான் விடுதலைப் படையைச் சேர்ந்த ஜாபிர் சிங் என்பவர் கொல்லப்பட்டார். மற்றொரு குழு மோதலில் அவுதார் சிங் என்ற தீவிரவாதியும் கொல்லப்பட்டார்.

வாம்பாரி என்ற இடத்தில் பொலிசாருக்கும் சீக்கிய தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார். சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. ஒலுவால் என்ற இடத்தில் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரின் வீட்டினுள் நுழைந்த தீவிரவாதிகள், அவரது மகனைச் சுட்டுக் கொன்று வீட்டை வெடி வைத்துத் தகர்த்தனர்.

## எட்டு சரை 'ஹெரோயின்' பெண்ணிடம் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படும் கசிப்பு, ஹெரோயின் போன்ற போதை வஸ்துகளை தடைசெய்வதற்கான பொதுமக்கள் குழுவினர், இன்று யாழ். வீதியில் உள்ள ஒரு வீட்டை சோதனையிட்ட போது 8 சரை 'ஹெரோயின்' பவுடர் கைப்பற்றப்பட்டது.

இக் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது 3பிள்ளைகளின் தாயான அவ் வீட்டுப் பெண்மணி, இதனைத் தான் தொழிலாக பலகாலம் செய்துவருவதாகத் தெரிவித்து, மேற்கொண்டு இத்தொழிலைச் செய்யப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அத்தோடு போதைவஸ்துப் பாவனையாளர்கள் பணம் இல்லாத சந்தர்ப்பங்களில் பொருட்களை அடவுவைத்தே இப்போதைவஸ்தைப்பெற்றுக் கொண்ட ரகசியமும் வெளியானது. இவ்வகையில் 7 மணிக்கூடு, ஒரு அலுமாரி வாகனங்கள் திருத்தப் பயன்படும் சாவிக்கொத்து என்பனவும் மேற்படி குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இத்தகைய வியாபாரங்களில் பெண்களே பெரும்பாலும் ஈடுபட்டுவருவதாகவும் அக் குழுவினர் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

## பத்திரிகாசிரியர் வீட்டுக்குக் கல்லெறி

(சென்னை)

தமிழ்நாட்டில் வெளியாகும் அரசியல் வார இதழான 'தராசு' ஆசிரியர் ஷ்யாம், தமது வீட்டையும் காரையும் சிலர் கல்வீசித் தாக்கியதாக பொலிசில் புகார் செய்துள்ளார்.

வியாழனன்று இரவு நடைபெற்ற இத்தாக்குதலில் அவருடைய வீடும், காரும் சேதமாக்கப்பட்டதாகவும், வீட்டுக்காவலர் காயமுற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

தராசு மக்கள் மன்றக் கட்சித் தலைவராக உள்ள தாம் தேர்தல் பிரசாரத்திற்கு கோயம்புத்தூர் சென்றிருப்பதை அறிந்து இத் தாக்குதல் நடந்துள்ளதாகவும் சட்டப்பேரவை உறுப்பினரும் முதலமைச்சர் கருணாநிதியின் மகனுமாகிய மு. க. ஸ்டாலின் பற்றி எழுதிய கட்டுரைகள் காரணமாக அவரது தூண்டுதலின் பேரில் இந்தத் தாக்குதல் நடை பெற்றதாவும் ஷ்யாம் குறிப்பிட்டுள்ளார்.

## மாகாண முதலமைச்சருக்கு சிவல் தொழிலாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''சிவல்தொழிலாளர்களுக்கு தொழில் ஊக்குவிப்புப் பணமாக நாலாயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்டுக் கொண்டமைக்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொண்ட மாகாண அரசுக்கும், அதன் முதலமைச்சருக்கும், ஐக்கிய சிவல் தொழிலாளர்கள் சங்கம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது.''

இவ்வாறு ஐக்கிய சிவல் தொழிலாளர் சங்கம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது.

''வட பகுதியில் ஏற்பட்ட வன்செயல்களின் போது தொழில்செய்ய முடியாது பாதிப்புக்குள்ளான பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிவல் தொழிலாளர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட சிவல் தொழிலாளர்களுக்கு நிவாரணமாக நாலாயிரம் வழங்குமாறு மாகாண முதலமைச்சரிடம் நேரில் எமது சங்க உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தமைக் கிணங்கவே முதல் அமைச்சரும், மாகாண அரசும் இந் நடவடிக்கையை மேற்கொண்டது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்,

## சார்க் அமைப்பின் அடுத்த மாநாடு

(காத்மாண்டு)

தெற்காசிய நாடுகளின் அமைப்பான சார்க் அமைச்சர்கள் சபையின் ஏழாவது கூட்டத்தொடர் எதிர்வரும் புதன்கிழமை பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாபாத்தில் தொடங்கவிருக்கிறது. இவ் அமைச்சர்கள் சபை அடுத்த உச்சிமாநாட்டை எப்போது, எங்கே நடத்துவதென்று முடிவுசெய்யும்.

(வெளியுறவு அமைச்சர்கள், நடக்கவிருக்கும் இரண்டுநாள் கூட்டத்தில், அடுத்த ஆண்டுக்கான சார்க் பணிகளுக்கு ஒப்புதல் கொடுப்பதோடு, நிறைவேற்றப்படும் பணிகளைப் பரிசிலனை செய்வார்கள் என்றும் சார்க் அமைப்பின் தலைமைச் செயலாளர் திரு. கே. கே. பார்க்கவா தெரிவித்தார்.

## டி. ராஜேந்தரின் புதுக் கட்சி

(சென்னை)

பிரபல தமிழ் திரைப்பட இயக்குனரும், தயாரிப்பாளருமான டி. ராஜேந்தர், 'தாயக மறுமலர்ச்சிக் கழகம்' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றைத் தொடக்கி, அதன் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

'தாய்மையை மதிப்போம், தூய்மையைத் துதிப்போம், வாய்மையை வளர்ப்போம், வறுமையை விரட்டுவோம், அறியாமையைஅகற்றுவோம்' என்னும் ஐந்து பிரதான கொள்கைகளை வைத்துக் கொண்டு இந்தப் புதிய அரசியல் கட்சியைத் தாம் ஆரம்பித்துள்ளதாக பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போது டி. ராஜேந்தர் குறிப்பிட்டார்.

கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை ஆகிய ஐந்து நிறங்களிலான தன் கட்சிக் கொடியையும் அறிமுகப்படுத்தினார் ராஜேந்தர்

''வெறும் தேர்தல் அல்ல எனது குறி, தி. மு. க. எதிர்ப்பு நடவடிக்கை தொடரும்' என்று கூறிய ராஜேந்தர், 'மனதில் பட்டதை பட்டாசாக வெடிப்பவன் நான். எதிலும் வித்தியாசப்பட்டவன், முடியாதென்றால் முடியாது முடியும் என்றால் முடியும் என்பது என் வாதம். அதுவே என் பிடிவாதம்'' என்றும் சொன்னார்.

டி. ராஜேந்தர் நீண்டகாலமாக கலைஞர் கருணாநிதியின் அன்புத் தம்பியாகவும், பின்னர் கொஞ்சநாட்கள் செல்வி ஜெயலலிதாவின் பாசத் தம்பியாகவும் மேடைகளில் முழங்கி வந்தார். இப்போது இ. காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டணிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்ள யோசித்துவருவதாகக் கூறியுள்ளார்.

இதற்கு முன்னதாக சிவாஜி கணேசன், பாக்கியராஜ் போன்ற நடிகர்கள் தனியாகத் தொடக்கிய கட்சிகள் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மக்களின் உரிமைகளை நிலைநாட்டவே இ. காங்கிரஸ் போட்டியிடுகிறது

(அமெதி)

மக்களைச் சுரண்டலில் இருந்து விடுவித்து அவர்களுக்காக உரிமைகளை நிலைநாட்டவே இந்தத் தேர்தலில் இ. காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது என்று அமெதி தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பிரதமர் ராஜீவ் காந்தி கூறினார்.

எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாயத்திற்காக வகுப்புவாத பிரிவினைக் கட்சிகளை ஆதரித்து வருவதாக குற்றம் சாட்டிய பிரதமர். தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் பஞ்சாப் பிரச்சினை பற்றி எதுவும் கூறப்படவில்லை என்று கூறினார்.

இதே வேளை, பிரதமர் ராஜீவ் காந்தி 5,8,10ந் திகதிகளில் தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பன்சிலால் தொகுதியில் 122 பேர் போட்டி

(சென்னை)

இந்திய மக்களவைத் தேர்தலில் ஹரியாணா மாநில முன்னாள் முதல்வர் பன்சிலால், விலாஷி ஆவிலன் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். ஜனதா தளம் சார்பில் மாநில அமைச்சரான கரம் தேசிங் போட்டியிடுகின்றார். மேலும் 120 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஒரு தொகுதியில் 122 பேர் போட்டியிடுவதன் மூலம் தேர்தல் அதிகாரிகளுக்கு பெரும் தலைவலி ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ், ஜனதா தள வேட்பாளர்களைத் தவிர்த்து 120 வேட்பாளர்களுக்கு தேர்தல் சின்னங்களை ஒதுக்குவதில் பிரச்சினை உள்ளது. சின்னங்களை ஒதுக்கியபின் 122 வேட்பாளர்களின் பெயர்களும் சின்னங்களும் அடங்கிய வாக்குச் சீட்டைத் தயாரிப்பதில் உள்ள சிரமம். ஒரு தினசரிப் பத்திரிகையின் அளவுக்கு வாக்குச் சீட்டு (பலட் சீற்) இருக்கும். இதை மடித்து வாக்குப் பெட்டிக்குள் போடுவதென்பது பிரச்சினை மட்டுமல்ல; இதற்காக பெரிய பெரிய பெட்டிகளைத் தயாரிக்க வேண்டியும் உள்ளது. புதிது புதிதாய் என்னென்ன சின்னங்கள் வழங்கலாம் என்பதில் தேர்தல் அதிகாரிகள் மற்ற மாநில யோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் நாடியுள்ளார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

## போதைவஸ்து பாவனையும் சமூக சீர்கேடுகளும்

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோதமான கசிப்பு வியாபாரமும், 'ஹெரோயின்' போன்ற போதைவஸ்துகளும் நகரத்தின் மையப் பகுதிகளில் விற்பனைசெய்யப்படுகின்றது. சந்தடி மிக்கதும், சன நடமாட்டம் நிறைந்ததுமான இப் பகுதிகளில், போதைப் பொருட்களின் விற்பனை சர்வசாதாரணமாக நடைபெற்றுவருகின்றது. விற்பனை மட்டுமன்றி பாவனையும் நடைபெறுகின்றது.

ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் அடாவடித்தனங்கள் வடக்கு கிழக்கில் தலைவிரித்தாடியபோது, தமது சுயநலம் காரணமாக வெளிநாடுகளுக்குச்சென்று, தமிழ்பேசும் மக்களின் போராட்டங்களைச் சுட்டிக்காட்டி, அகதி அந்தஸ்துத் தேடிய இளைஞர்களும், இயக்கங்களுக்கு நிதி சேகரிக்கும் பொருட்டு வெளிநாடுகளில் போதைப் பொருட்களைக் கடத்துவதைத் தொழிலாக வைத்துக்கொண்ட இளைஞர்களாலுமே வடபகுதியில் போதைப் பொருட்களின் பாவனையும், விற்பனையும் ஆரம்பித்துவைக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

இங்கு இளைஞர்கள் மக்களின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் நிலைநிறுத்துவதற்காக அரச படைகளோடு, நேருக்குநேர் மோதி வீரமரணம் அடைந்துகொண்டிருந்த வேளையில், பிறிதொரு பகுதி இளைஞர்கள் இந்த நாட்டையும், மக்களையும் பற்றிய சிந்தனையேயில்லாமல் தாம் வெளிநாடுகளில் 'கற்ற வித்தைகளுடன், எமது பிரதேசங்களுக்கு வந்து, மேலைநாடுகளின் சீரழிந்த பழக்க வழக்கங்களை] இங்கு அறிமுகப்படுத்தி, எமது சமூகத்தைச் சீரழித்துவந்தார்கள் என்னும் உண்மையையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்து இருந்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கசிப்பு தயாரிப்பும் விற்பனையும் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியதுமட்டுமல்லாமல், குறுக்குவழிகளில் பணம் சேகரிக்கும் குடிசைக் கைத்தொழிலாகவும் மாறிவிட்டது. மனித பாவனைக்கு உதவாததும், உடலுக்கு கேடுவிளைவிக்கக்கூடியதுமான சிமெந்து, துருப்பிடித்த இரும்புக் கம்பிகள், அழுகிப்போன பழங்கள் என்பவற்றோடு, வேறு பல போதையூட்டும் பொருட்களையும் மூலப்பொருளாகக் கொண்டே கசிப்பை உற்பத்திசெய்கின்றனர். இதனைப் பருகும் ஒருவருக்கு போதை ஏறும் அதேயளவு வேகத்தில் அவரது உடல்நலத்திற்கு கேடும் [illegible]கின்றது என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

கசிப்பு உற்பத்தியானது இன்று முதலீடு செய்து நிரந்தரமாக தயாரிக்கக் கூடிய குடிசைத் தொழிலாகவே சில பகுதிகளில் மாறியுள்ளது. கசிப்பு உற்பத்திக்கு எதிராகவும், இதில் சம்பந்தப்படும் நபர்களுக்கெதிராகவும் கடும் தண்டனை வழங்கக் கூடியதாக சட்டங்கள் நடைமுறையில் இல்லாததாலும், இருக்கும் சட்டங்களை அமுல் நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றங்களும், பொலீஸ் நிர்வாகமும் செயற்படாமலிருப்பதும் இச் சமூக விரோதக் கும்பல்களுக்கு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது.

கிராமப் பகுதிகளிலும், நகரப்பகுதிகளிலும் இத்தகைய விற்பனைகளில் ஈடுபடுவோரை சரியாக இனங்கண்டு, அவர்களையும் சமூக வாழ்வில் ஈடுபடுத்தும் பொறுப்பை சனசமூகநிலையங்கள் சமூகசேவை நிறுவனங்கள் என்பன ஏற்றுச்செயல்படவேண்டும்.

இப் போதைவஸ்துகளுக்கு அடிமையாவோர் தொடர்ந்தும் எவ்வித தொழில் முயற்சிகளிலும் ஈடுபடமுடியாதளவுக்கு நிரந்தர நோயாளிகளாகி விடுகின்றனர். இவர்களது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக மாறிவிடுகின்றது.

எமது சமூகத்தையும், இளம் சந்ததியையும் சீரழிக்கவும், இதன் மூலம் சமூகத்தில் பலவித ஒழுக்கக் கேடுகள் உருவாகவும் காரணியாக அமையக்கூடியபோதைப் பொருள் பாவனையைத்தடுக்க சகல தரப்பினரும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் இன்றைய அவசிய தேவையாகும்.

### விலைப்பட்டியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

இன்றைய சூழ் நிலையிலும், அன்றைய நடைமுறைகள் பின்பற்றப்படுவது வேதனைக்குரியது. யாழ். நகரத்திலும் சரி, ஏனைய பகுதிகளிலும் சரி ஒரு பொருளுக்கு கடைக்குக் கடை வித்தியாசமான விலைகள் போடப்பட்டிருப்பதனைக் காணலாம். இந்நிலை மாற்றப்பட்டு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளால் குறிப்பிடப்படும் விலைக்கே சகல பாவனைப் பொருட்களையும் விற்பனை செய்யவேண்டும்.

வழிப்பறிக் கொள்ளையர்களின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளாலும், ஆட்கடத்தல் மூலம் பெரும் தொகைப் பணத்தை கப்பமாக வர்த்தகர்களிடம் வசூலிப்பதாலும், வர்த்தகர்களுக்கேற்படும் மூலதன இழப்பை சரி செய்ய, பொது மக்களின் மீது சுமைகளை ஏற்றுவது முற்றிலும் தவறானது என்பதைசம்பந்தப்பட்ட அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

பொதுமக்களினதும், நுகர்வோரினதும் நலன் கருதி நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு முழு ஆதரவையும் வர்த்தகர்கள் தந்து எம்முடன் ஒத்துழைக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஸ்ரூடியோவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வகைத் திருட்டுகள் முன்னர் சந்தையின் உட்பகுதிகளிலேயே நடைபெற்று வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இந்திய தேர்தல் களம்

### அ. தி. மு. க. தேர்தல் அறிக்கை

## நாட்டின் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தி பிற்போக்கு சக்திகளை முறியடிப்போம்.

(சென்னை)

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தி, ஜனநாயக ஆட்சி முறையைப் பாதுகாக்கவும், பிற்போக்குப் பிளவு சக்திகளின் முயற்சிகளை முறியடிக்கும் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் மத்தியில் நிலையான ஆட்சி அமைக்கவும் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும் என்று அக்கட்சியின் தேர்தல் அறிக்கை சூளுரைத்துள்ளது.

இத்தேர்தல் அறிக்கை கட்சிப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவினால் நேற்று சென்னையில் வெளியிடப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் மத்திய மாநில உறவுகளில் கூட்டாட்சி முறை, ஹிந்தி மொழி பாவிப்பைத் தடுக்க சட்டமூலம், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல் நடத்த தொடர்ந்து பாடுபடுதல் ஆகியவையும் கட்சியின் முக்கிய பணிகள் என்று அறிக்கை கூறுகிறது.

இந்திய நாட்டின் ஸ்திரத் தன்மையைச் சீருலைத்து நாட்டைப் பிளவுபடுத்த சதிவலைகள் பின்னப்படுகின்றன என்றும் வகுப்புவாத சக்திகளுக்கு துணைபோகும் தேசிய முன்னணியின் கொள்கைகள் தேசதுரோகக் கொள்கைகள் என்றும் அ தி. மு. க. தேர்தல் அறிக்கை வன்மையாகச் சாடியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீதும் பல்வேறு குற்றச் சாட்டுகளை அறிக்கை கூறுகிறது.

## தமிழ்நாட்டில் தேர்தல் சூடு பிடிக்கிறது

(சென்னை)

தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பணியும், பிரச்சாரமும் முழுவேகத்தில் துவங்கியுள்ளது. மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு வாபஸ் பெறுவது வெள்ளியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் மும்முரமாக இறங்கியுள்ளன. சுவர்கள் அனைத்தையும் வழக்கம்போல கலர் கலராக காட்சிகள் ஆக்கிரமித்துள்ளன,

முதலமைச்சர் கருணாநிதி வெள்ளியன்று காலை வட சென்னையில் கூட்டமொன்றில் பேசினார். தென்சென்னை இ. காங்கிரஸ் வேட்பாளர் வைஜயந்திமாலா பாலி, தி.மு.க. வேட்பாளர் ஆலடி அருணா ஆகியோர் வாக்காளர்களை நேரடியாகச் சந்திக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வட சென்னையில் போட்டியிடும் ஐக்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் தா. பாண்டியனுக்கு ஆதரவாக இ. காங்கிரஸ், அ. தி. மு. க. கட்சியினர் அவருடன் பணியில் ஈடுபட்டனர். சென்னையில் அ தி. மு. க. ஒரு தொகுதியில்கூட போட்டியிடாவிட்டாலும் அக்கட்சியின் தொண்டர்கள், ஆதரவு வேட்பாளர்களுக்காக தீவிர பணிகளில் இறங்கியுள்ளனர்.

மக்களவைத்தேர்தல் நடைபெறும் இம்மாதம் 24-ந் திகதியை பொது விடுமுறை தினமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

## வேட்பாளர் மரணம்

### தேர்தல் பின்போடப்பட்டது

(போபால்)

மத்தியப் பிரதேசத்தில் ஷாதுல் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் திரு. விஸ்வரூட்சிங்போட்டே காலமானதைத் தொடர்ந்து அத் தொகுதியில் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. ஐ. ஏ. எஸ். அதிகாரியான விஸ்வரூட் சிங் இந்த தேர்தலுக்காக பதவியை ராஜினமாச் செய்துவிட்டு பாரதிய ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டார். கடந்த வியாழக்கிழமை கார் விபத்தில் படுகாயமடைந்த அவர் நாக்பூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். அவர் காலமானதைத் தொடர்ந்தே அத்தொகுதியில்தேர்தல் தள்ளிவைக்கப்படுகிறது.

### தி. மு. க தேர்தல் அறிக்கை

## கூட்டாட்சிக்கு குரல் கொடுப்போம் காட்டாட்சிக்கு விடை கொடுப்போம்

(சென்னை)

''நாட்டின் பாதுகாப்பும், கண்ணியமும் நாட்டு மக்களின் அடிப்படை நலனும் பேராபத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. மத்தியில் இன்றுள்ள ஆட்சி திரும்பி வர நேரிட்டால் அதன் பிறகு இந்தியாவுக்கு மீட்சி இல்லை. இத்தகைய ஆட்சியை தேர்தலில் வீழ்த்திட வேண்டும்'' என்று தி.மு.க தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கூட்டாட்சிக்கு குரல் கொடுப்போம் காட்டாட்சிக்கு விடை கொடுப்போம்'' என்றும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுப் பேசும் போது முதலமைச்சர் மு. கருணாநிதி குறிப்பிட்டார். தி. மு. க தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுத் தலைவர் முரசொலி மாறன். கட்சியின் பொதுச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

தேசிய முன்னணி வெளியிட்ட தேர்தல் அறிக்கையின் அத்தனை அம்சங்களையும் தமது கட்சி ஏற்றுக்கொள்வதாகவும் அந்த தேர்தல் அறிக்கை கூறுகிறது.

## நீதிமன்றத்தில் நேற்று ஜெயலலிதா மீது விசாரணை

(சென்னை)

அ. தி. மு. க, பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். தமிழக அரசு அவர்மீது தொடர்ந்துள்ள அவதூறு கிரிமினல் விசாரணை நேற்று தொடங்கியது.

முதல்நாள் விசாரணை ஆதலால் ஜெயலலிதா நேற்று நேரில் ஆஜரானார். 'இந்த வழக்கு சம்பந்தப்பட்ட நகல் உங்களுக்கு வழங்கப்பட்டதா? என்று நீதிபதி கேட்டதற்கு, பெற்றுக்கொண்டேன் என்று ஜெயலலிதா பதிலளித்தார். இதன்பின்பு வழக்கு விசாரணை இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிபதி கிருஷ்ணசாமி அறிவித்தார்.

அ.தி.மு க. இணைப் பொதுச் செயலாளர் ஆர், எம். வீரப்பன், துணைப் பொதுச் செயலாளர் ராகவானந்தம், பொருளாளர் மாதவன், சட்டசபை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எஸ். திருநாவுக்கரசு. முன்னாள் அமைச்சர்கள் அரங்கநாயகம், ஏ. ரி. ராமன், ஏ. அருணாசலம் ஆகியோர் உள்ளிட்ட அ தி. மு. க. தலைவர்களும் தொண்டர்களுமாக நூற்றுக் கணக்கானவர்கள் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

ஆந்திராவில் இருந்து தமிழ் நாட்டுக்கு அரிசி, பருப்பு வாங்கப்பட்டதில் தமிழக அரசு 6 கோடி ரூபா ஊழல் செய்திருப்பதாக பத்திரிகையாளர்களிடம் கடந்த மாதம் ஜெயலலிதா புகார் கூறியிருந்தார்.

### வடக்குக் கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்நிலையமும். நீதிமன்றமும் திறக்கப்படுவதால் இதுகாலவரை நீதி நிர்வாகத் துறையின் செயலின்மை காரணமாக ஸ்தம்பிதம் அடைந்திருந்த சிவில் நிர்வாகம் முழுமையாக செயல்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு கிழக்குப் 'பொலிஸ் நிலையங்களில் மொத்மாக 9500 தமிழ் பொலீசார் கடமையி லீடுபடுத்தப்படுவார்கள் என மாகாண அரசின் முக்கிய பிரமுகர் விடுதலை நிருபரிடம் தெரிவித்தார்.

### நூல்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளப்பட்டிருப்பதாகவும் கலாச்சாரத் திணைக்களம் தெரிவித்திருக்கிறது

### ஓராண்டு நினைவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி அவர்களும், யாழ்ப்பாணத்தில் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. கே, ரவீந்திரன் அவர்களும் வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. பராபரன் அவர்களும் மரம் நடுகை இயக்கத்தை ஆரம்பித்து வைப்பார்கள் என மாகாண அரசு வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது..

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல: 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 5-11-1989ல் வெளியிடப்பட்டது

தொலைபேசி 291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org